**ஹிக்கடுவ நகர சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹிக்கடுவ நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹிக்கடுவ நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 18 ஆந் திகதி அப்புறப்படுத்தப்பட்ட ரூபா 824,700 தொகை பெறுமதியான டிரக்டர் ஒன்றின் பெறுமதியினை கணக்குகளில் இருந்து அகற்றப்படாமையால் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி அத் தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 13,579,829 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | வித்தியாசம் தொடர்பாக கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 388,948,625 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரை ஆக்குவேன். | முறைப் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அதிகாரம் | | | |
| பிரிவு 164 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 48 ஹோட்டல்களில் 2019 ஆம் ஆண்டின் போது 31 ஹோட்டல்கள் மற்றும் 2020 ஆண்டில் 13 ஹோட்டல்கள் மாத்திரம் 1 சதவீத அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்தியிருந்தது. | 2019 ஆண்டு முதல் சுற்றுலாத் துறை வீழ்ச்சி அடைந்திருந்ததுடன், 03 ஹோட்டல்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 6,981,015 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 5,064,630 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்**<br>நிலுவை வரி ரூபா 40,322,541 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சிவப்பு அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்ததுடன், நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை நடமாடும் சேவைகள் செயற்படுத்துகின்றேன். | |
| **(ஆ)** | **கடை வாடகை**<br>நிலுவை கடை வாடகை ரூபா 4,575,665 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொடுப்பனவுகளை புறக்கணித்துள்ள நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 252,330 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானங்கள்**<br>பிரதான செயலாளரினால் சபைக்கு செலுத்த வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 58,504,508 தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தத் தொகையை அறவீடு செய்தவற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | |

## 3. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 சுற்றாடற் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| 2012 ஆகஸ்ட் மாதம் முதல் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் மொன்ரோவியாவத்த குப்பைச் செயற்திட்டத்திற்கு வருடாந்தம் சுமார் 1,700 தொன்கள் இடப்படுவதுடன், குப்பைகளை இடுவதற்கான கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,035,500 இற்கான தொகையொன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்ததுடன், சபைக்கு நீண்ட கால குப்பை முகாமைத்துவத் திட்டமொன்று செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நாளாந்தம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருட்கள் காணி ஒன்று இன்மையினால் ரத்கம மொன்ரோவியாவத்த திண்மக் கழிவுப் பொருள் செயற்திட்டதிற்கு சாட்டுதல் மேற்கொள்ளப்படுகின்றது. | குப்பை முகாமைத்துவதத்திற்காக நீண்ட காலத் திட்டம் ஒன்று சபையில் காணப்பட வேண்டும். |